**சார்பு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை :– திருமதி S. மும்தாஜ், B.Sc.,B.L.,**
**சார்பு நீதிபதி, சீர்காழி.**
----

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 8 ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண். 246/2022 – ல் இடைமனு எண். 5/2025**

ஷபான் பீவி ....மனுதாரர் /4 ம் பிரதிவாதி

..எதிர்..

1. ராஜகுமாரி (எ) கருப்பாயி
2. ஆரம்மாள் (இறந்தார்.) .....எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 04.02.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபொழுது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். முத்துக்குமாரர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. இ. செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

அசல் வழக்கின் பிராதில் 1, 2 வாதிகள் மற்றும் 1, 2 மற்றும் 3 எதிர்வாதிகளின் சரியான முகவரிகளை இந்த வழக்கின் பதிவு முகவரிகளாக (Registered Addresses) முன்னிலைப்படுத்தி அவை சரியான முகவரிதான் என்பதற்கு ஆதார் கார்டு உள்ளிட்ட ஆதாரங்களோடு நீதிமன்றத்தில் சமர்ப்பித்து உறுதிபடுத்த வழக்காளருக்கு கட்டளையிட்டு, அக்கட்டளையை குறிப்பிட் 2 வாரங்களுக்குள் நிறைவேற்ற உத்தரவிடும்படியும், அப்படி நிறைவேற்றாவிட்டால் அசல் வழக்கு விசாரணையிலிருந்து விலக்கி இருத்தி (STAY) வைத்தும், வழக்குரையை (Plaintiff) வழக்குப் பதிவெண்ணை நீக்கி வழக்காளரிடமே திருப்பி அளிக்கவும் (Return of Plain ) உத்தரவிட வேண்டி உ.வி.மு.ச. கட்டளை 6, விதி 14 A (5) மற்றும் கட்டளை 7, விதி 10 மற்றும் பிரிவு 151 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கின் 4 ம் பிரதிவாதி. அசல் வழக்கின் உரிமையை பெறுவதற்காக வழக்காளர்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மாறாக பொய் உரிமையியல் வழக்கொன்று நிலுவையில் வைத்திருக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தில் அ.வ.எண்.126/2011 என்ற வழக்கை சீர்காழி உரிமையியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி, சொத்து மதிப்பிடடு ஆள்வரைக்கருதி மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்திற்கு அ.வ.எண்.134/2017 மாற்றப்பட்டு

பின்பு சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.245/2022 தற்போது நிலுவையிலேயே எந்தவித முன்னேற்றமின்றி வைக்கப்பட்டிருக்கிறது. 2011 வருடத்தில் துவங்கி 2024 வரை 13 வருடங்களாக நிலுவையில் வழக்காளரால் நிலுவையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கின் வாதுரையில் 1, 2 மற்றும் 3 வது எதிர்வழக்காளர்களின் முகவரிகள் வழக்குரையில் (Plaint) குறிப்பிட்டுள்ள முகவரிகள் (Registered Addresses) முற்றிலும் குறைபாடு உடையதும், உண்மைக்கு புறம்பானதும், கற்பிதமானதும்( Incomplete, false and fictitious) ஆகும். வாக்காளர்கள் (plaintiffs) முகவரிகளும் முற்றிலும் குறைபாடு உடையதும், உண்மைக்கு புறம்பானதும் ஆகும். மேலும் 4 வது எதிர்வழக்காளரின் சொத்துரிமைக்கு வழக்கை காலங்கடத்துவதன் மூலம், இழப்பை ஏற்படுத்தும் உள்நோக்கத்தோடு பொய் வழக்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. அசல் வழக்கில் இல்லாத முகவரியை கொடுத்து 1, 2 மற்றும் 3 வது எதிர்வழக்காளர்களுக்கு திட்டமிட்டு நீதிமன்ற அறிவிப்புகள் சார்பு செய்யாத வகையில் அனுப்பி நீதிமன்ற அறிவிப்புகளை சார்பு செய்யாது, நீதிமன்றத்தில் பொய் காரணம் கூறி செய்தி ஏட்டு விளம்பரம் செய்து 1 முதல் 3 எதிர்வாதிகள் நீதிமன்றத்தில் முன்னிலை ஆகாது தடுத்து இவ்வழக்கை ஒருதலைபட்சமாக தீர்ப்பு வழங்கும்படி செய்து வருகின்றனர். எனவே அசல் வழக்கின் வழக்காளர்களின் முகவரிகளை திருத்தம் செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. <u>எதிருரையின் சுருக்கம்</u>

மனுவில் சங்கதிகள் உண்மையல்ல. எதிருரையில் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற அனைத்து சங்கதிகளும் சரியல்ல. மனுவிலும், அபிடவிட்டிலும் கூறியுள்ள குறுந்தலைப்பில் உள்ள விபரங்கள் சரியல்ல. 2011 ம் வருடத்தில் துவங்கி 2024 வரை 13 வருடங்களாக நிலுவையில் வழக்காளர்களால் நிலுவையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதின் உண்மை தன்மையை நிரூபிக்க மனுதாரர் கடமைப்பட்டுள்ளார். மேலும் மனுதாரர் கூறியபடி வழக்கின் வாதுரையில் 1, 2 மற்றும் 3 வது எதிர்வழக்காளர்களின் முகவரிகள் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிகள் முற்றிலும் குறைபாடுடனும், உண்மைக்கு புறம்பானது. மேலும் தாவா வழக்கு சொத்தில் முதல் வாதிக்கு உரிய 1/3 பாகத்தை சேர்த்து தாவா வழக்கின் 2 ம் பிரதிவாதி ராசாம்மாள் 4 ம் பிரதிவாதிக்கு 12.08.2009 ல் கிரய சாசனம் எழுதி கொடுத்துள்ளார். மேற்படி கிரய சாசன ஆவணமும் சீர்காழி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1971/2009 ஆக 12.08.2009 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் 2 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதிக்கு தனக்கு உரிமையில்லாத 1/3 பாகத்தை சேர்த்து 4 ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார். அந்த ஆவணத்திலேயே பிராதில் கண்ட விலாசத்தில் அதாவது சீர்காழி தாலுக்கா, திருமுல்லைவாசல் கிராமம், திருமுல்லைவாசல் மெயின்ரோட்டில் வசித்து வந்த கோவிந்தன் மனைவி இராசம்மாள் என்று மிக தெளிவாக

கூறியுள்ளார். அதில் மேற்படி சொத்து அவருடைய கணவருக்கு குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினை படி கிடைக்க பெற்றது என்றும் கூறியுள்ளார். அவர்களுடைய நிரந்தர முகவரி அதாவது 1 முதல் 3 பிரதிவாதிகளின் நிரந்தர முகவரி சீர்காழி தாலுக்கா, திருமுல்லைவாசல் கிராமம் ஆகும். அவர்கள் தொழில் நிமித்தமாக வெளிநாடு சென்று வருவதால் அவர்களது நிரந்தர முகவரி வெளிநாடு இல்லை. மேலும் வழக்கு தாக்கல் செய்த 2011ல் ஆட்சேபணை செய்யாத 4ம் பிரதிவாதி தனக்கு நல்ல கட்சி இல்லை என்பதை நன்கு தெரிந்து கொண்டு இந்த முதல் வாதியின் பாகத்தையும் சேர்த்து 2ம் பிரதிவாதியிடம் கிரயம் வாங்கி கொண்டு மேற்படி ஆவணம் செல்லாது, அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்று பிராதில் பரிகாரம் கேட்டுள்ள நிலையில் அதிலிருந்து தப்பிப்பதற்கு தான் மனுதாரர் /4ம் பிரதிவாதி மனுவை தாக்கல் செய்துள்ளார். உண்மையில் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் முகவரி சரியில்லை என்றால் 13 வருடங்களுக்கு முன்பே இந்த மனுதாரர் ஆட்சேபணை செய்திருப்பார். மேற்படி முகவரி சரியானது என்பதால் அப்போது ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. எனவே காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது. வழக்கில் தனக்கு நல்ல கட்சி இல்லாத மனுதாரர் /4ம் பிரதிவாதி எதிர்மனுதாரர்கள் மீது அவதூறு கூறி தாவா மனுவை தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்யக்கோரியுள்ளார்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**5. தீர்வு.**

மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பில் வழக்கு 1 முதல் 3 எதிர்வாதிகளின் சரியான முகவரிகளை பதிவு முகவரிகளாக முன்னிலைப்படுத்தி ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க கோரியும், தவறும் பட்சத்தில் வழக்குரை பதிவெண்ணை நீக்கி வழக்காளர்களிடம் திருப்பி அளிக்க கோரியும் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6, விதி 14A (5) மற்றும் கட்டளை 7, விதி 10ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. மனுதாரர் தரப்பில் மனுதாரர் அசல் வழக்கின் 4ம் எதிர்வாதி என்றும், அசல் வழக்கானது சீர்காழி மாவட்டம் உரிமையியல் நீதிமன்றத்தில் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டு அசல் வழக்கு எண்.126/2011 ஆக பதிவு செய்யப்பட்டு நிதிநிலை ஆள்வரை கருதி மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அசல் வழக்கு எண்.134/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் சீர்காழி சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு வழக்கு எண்.246/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 2011 முதல் 2024 வரை 13 வருடங்களாக அசல் வழக்கு நிலுவையில் இருந்து வருவதாகவும், வழக்குரையில் 1 முதல் 3 எதிர் வாழக்காளர்களின் முகவரிகள் முன்றிலும் குறைபாடு உடையதும், உண்மைக்கு புறம்பானது என்றும், வாதிகள்

உள்நோக்கத்துடன் 4ம் பிரதிவாதியின் சொத்துரிமைக்கு வழக்கை காலம் கடத்துவதன் மூலம் இழப்பை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், பொய்யான முகவரிகளை 1முதல் 3 பிரதிவாதிகளின் பதிவு முகவரியாக நீதிமன்றத்தில் கொடுத்து அறிவிப்புகள் சார்பு செய்யாத வகையில் பொய்யான காரணங்களை கூறி நாளிதழ் விளம்பரம் செய்து, 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கில் ஆஜராகாமல் வாதிகள் திட்டமிட்டுள்ளனர் என்றும், எனவே 1முதல் 3 பிரதிவாதிகளின் சரியான முகவரிகளை முன்னிலைப்படுத்தி அதற்குரிய ஆதார் அடையாள அட்டை ஆதாரங்களை முன்னிட கோரியும், தவறும் பட்சத்தில் அசல் வழக்கின் விசாரணையை நிறுத்தி வைத்தும், வழக்கின் பதிவெண்ணை நீக்கி வழக்குரையை திருப்பி அளிக்கக் கோரியுள்ளார்.

7. மனுதாரர்கள் மனுவிற்கு எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் தாவா சொத்தில் முதல் வாதிக்குரிய 1/3 பாகத்தை சேர்த்து வழக்கில் 2ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு 12.08.2009ல் கிரய சாசனம் எழுதிக் கொடுத்து சீர்காழி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1971/2009 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த கிரய சாசனத்திலேயே பிராதில் கண்ட 1முதல் 3 பிரதிவாதிகளின் விலாசமான சீர்காழி தாலுக்கா, திருமுல்லைவாசல் கிராமம், திருமுல்லைவாசல் மெயின்ரோட்டில் வசித்து வந்த கோவிந்தன் மனைவி இராசம்மாள் என்று மிக தெளிவாக கூறியுள்ளார் என்றும், அதாவது 1 முதல் 3 பிரதிவாதிகளின் நிரந்தர முகவரி சீர்காழி தாலுக்கா, திருமுல்லைவாசல் கிராமம் என்றும், தொழில் நிமித்தமாக அவர்கள் வெளிநாடு சென்று வருகிறார்கள் என்றும், இந்த விவரம் 4ம் பிரதிவாதிக்கு நன்கு தெரிந்து இருந்தும், 2011ல் ஆட்சேபணை செய்யாமல் தனக்கு வழக்கில் நல்ல கட்சி இல்லை என்பதை தெரிந்துக் கொண்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், அவ்வாறு பிரதிவாதிகள் முகவரி உண்மையில் சரியில்லை என்றால் 13 ஆண்டுகளுக்கு முன்பே 4ம் பிரதிவாதி ஆட்சேபணை தாக்கல் செய்திருப்பார் என்றும், காலம் கடந்து தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யக்கோரியுள்ளார்.

8. இம்மனுவில் இருதரப்பும் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

9. அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் 1முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை, பிந்தைய வருமானம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 126/2011 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிதிநிலை

ஆள்வரை அதிகார வரம்பின் கீழ் மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அசல் வழக்கு எண்.134/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, ஆள்வரை அதிகார வரம்பின் காரணமாக இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அசல் வழக்கு எண்.246/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. வழக்கு நிலுவையில் அசல் வழக்கின் வாதுரையில் (Plaint) 1 முதல் 3 பிரதிவாதிகளின் விலாசம் சீர்காழி தாலுக்கா, திருமுல்லைவாசல் கிராமம், திருமுல்லைவாசல் மெயின்ரோடு என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரி முற்றிலும் தவறாக உள்ளது என்றும் உண்மைக்கு புறம்பானது என்றும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரர்/4ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி இராசம்மாள் என்பவரிடமிருந்து வழக்கு சொத்தை கிரயம் பெற்ற கிரய ஆவணத்தின் உண்மை நகல் ம.சா.ஆ.1ல் 2ம் பிரதிவாதியின் வழக்குரை முகவரியான சீர்காழி தாலுக்கா, திருமுல்லைவாசல் கிராமம், திருமுல்லைவாசல் மெயின் ரோட்டில் வசித்து வந்து, தற்காலம் வெளிநாட்டில் வசித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கிரய ஆவணத்தில் 2ம் பிரதிவாதியின் வெளிநாட்டில் வசிக்கும் முகவரி எதுவும் குறிப்பிடப்படவில்லை. மேலும் சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.226/2011ன் பிராது உண்மை நகல் ம.சா.ஆ.2 ஆகவும், 2ம் வாதி மற்றும் அன்வர்சதாத் இடையே ஏற்பட்ட வாடகை ஒப்பந்த பத்திரத்தின் உண்மை நகல்கள் ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.4 ஆகவும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்டு இந்தியாவில் வசிக்கவில்லை என்று திருப்பப்பட்ட அஞ்சல் உறை ம.சா.ஆ.5 முதல் ம.சா.ஆ.7 ஆகவும், இவ்வழக்கில் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் திருமுல்லைவாசல் கிராமத்தில் வசித்து வந்து தற்போது மலேசியாவில் வசித்து வருகிறார்கள் என்று கிராம நிர்வாக அதிகாரியால் மேற்குறிப்பு செய்யப்பட்டு திருப்பப்பட்ட நீதிமன்ற அழைப்பாணை உண்மை நகல் ம.சா.ஆ.8 ஆகவும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட நீதிமன்ற அழைப்பாணை திருப்பப்பட்டதற்கான அஞ்சல் உறை நகல்கள் ம.சா.ஆ.9 முதல் ம.சா.ஆ.11 ஆகவும், மேற்படி அசல் வழக்கில் முதல் வாதி தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலம் ம.சா.ஆ.12 மற்றும் ம.சா.ஆ.13 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் 2ம் வாதியின் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் எ.ம.சா.ஆ.1 ஆகவும், முதல் வாதிக்கு அனுப்பிய அறிவிப்பு சான்று நகல் எ.ம.சா.ஆ.2 ஆகவும், 26.03.1997ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு நகல் எ.ம.சா.ஆ.3 ஆகவும், அசல் வழக்கில் சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 226/2011 ன்

நிதிநிலை அதிகார வரம்பின் கீழ் திருப்பப்பட்டதற்கான உத்தரவு உண்மை நகல் எ.ம.சா.ஆ.4 ஆகவும், 2ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவண நகல் எ.ம.சா.ஆ.5 ஆகவும், 1, 2 வாதிகளின் முகவரிக்கான அடையாள அட்டைகள் எ.ம.சா.ஆ.6 முதல் எம.சா.ஆ.8 ஆகவும், மின் கட்டண ரசீது எ.ம.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. வழக்காவணங்களின் பரிசீலனையில் 1 முதல் 3 பிரதிவாதிகளின் வழக்குரை முகவரிக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை சார்வு செய்யப்படாமல் அவர்கள் வெளிநாட்டில் வசித்து வருவதாக திருப்பப்பட்டு அதன் அடிப்படையில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு நாளிதழ் விளம்பரம் மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டு நீதிமன்றம் ஆஜராகவில்லை என்பதால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளனர். மனுதாரர்/4ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் வழக்குரையில் கண்டுள்ள முகவரிகள் உண்மை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ள போதும், 1 முதல் 3 பிரதிவாதிகளின் தற்போதைய முகவரி எதுவும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்படவில்லை. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6, விதி 14A ன் கீழ் வழக்கின் தரப்பினர்கள் அவர்களின் வாதுரையுடன் (Pleadings) பதிவு முகவரியை முறையான படிவத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

13. இருதரப்பு சான்றாவணங்களின் பரிசீலனையில் 2ம் பிரதிவாதியிடமிருந்து மனுதாரர்/4ம் பிரதிவாதி வழக்கு சொத்தை கிரயம் பெற்ற கிரய ஆவணம் ம.சா.ஆ.1 மற்றும் 2ம் பிரதிவாதிக்கு முதல் பிரதிவாதி எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் எ.ம.சா.ஆ.3 ஆகியவற்றில் 1 முதல் 3 பிரதிவாதிகளின் முகவரியாக வழக்குரையில் உள்ள முகவரி கொடுக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் மேற்கண்ட முகவரியில் வசிக்கவில்லை என்று அழைப்பாணைகள் திருப்பப்பட்டுள்ளது என்பது இருதரப்பு சான்றாவணங்களின் மூலம் தெரியவருகிறது. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு நாளிதழ் விளம்பரம் மூலம் அசல் வழக்கில் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. வழக்காவணங்களின் பரிசீலனையில் அசல் வழக்கின் வழக்குரையுடன் பிரதிவாதிகளின் பதிவு முகவரி முறையான படிவத்தில் வாதிகளால் தாக்கல் செய்யப்படவில்லை என்பதும் தெரியவருகிறது. மேலும் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 3 பிரதிவாதிகளின் முகவரிகள் உண்மையல்ல என்று 4ம் பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள போதும் மனுதாரரின் கிரய சாசனம் ம.சா.ஆ.1 லேயே வழக்குரையில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு குறிப்பிடப்பட்டுள்ள முகவரி தான் குறிப்பிடப்பட்டுள்ளது. 1 முதல் 3 பிரதிவாதிகளின் தற்போதைய முகவரிகள் எதுவும் 4ம் பிரதிவாதி தரப்பில் முன்னிடப்படவில்லை. எனவே அசல் வழக்கில் பிரதிவாதிகளின் பதிவு முகவரி வாதிகளால் முன்னிடப்படவில்லை என்பதால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6, விதி 14A ன்

கீழ் இன்றிலிருந்து 2 வாரக்காலத்திற்குள் வாதிகள் 1 முதல் 3 பிரதிவாதிகளின் பதிவு முகவரியை முறையான படிவத்தில் முன்னிட வேண்டுமென்று தீர்மானித்து இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

14. **முடிவாக**, இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, எதிர்மனுதாரர்கள்/வாதிகள் இன்றிலிருந்து 2 வாரக் காலத்திற்குள் அசல் வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகளின் பதிவு முகவரியை உரிய படிவத்தில் முன்னிட வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுத்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/–..எஸ். மும்தாஜ்)

சார்பு நீதிபதி.
சீர்காழி

**பின் இணைப்பு**

**மனுதாரர் தரப்பு சாட்சி** – இல்லை–

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 12.08.2009 | மனுதாரர்/4ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | -- | அசல் வழக்கு எண்.226/2011ன் பிராது உண்மை நகல் |
| ம.சா.ஆ.3 | 17.05.2007 | 2ம் வாதிக்கும், அன்வர் சதாத் என்பவருக்கும் இடையேயான வாடகை ஒப்பந்தம் நகல் |
| ம.சா.ஆ.4 | 01.08.2009 | 2ம் வாதிக்கும், அன்வர்சதாத் என்பவருக்கும் இடையேயான வாடகை ஒப்பந்தம் நகல் |
| ம.சா.ஆ.5 | –– | 3ம் பிரதிவாதி இல்லை என்று திருப்பப்பட்ட அஞ்சல் உறை நகல் |
| ம.சா.ஆ.6 | –– | 2ம் பிரதிவாதி இல்லை என்று திருப்பப்பட்ட அஞ்சல் உறைநகல் |
| ம.சா.ஆ.7 | –– | 1ம் பிரதிவாதி இல்லை என்று திருப்பப்பட்ட அஞ்சல் உறை நகல் |
| ம.சா.ஆ.8 | – | கிராம நிர்வாக அதிகாரியால் மேற்குறிப்பு செய்யப்பட்ட நீதிமன்ற அழைப்பாணை உண்மை நகல் |
| ம.சா.ஆ.9 | – | 3ம் பிரதிவாதி இல்லை என்று திருப்பப்பட்ட அஞ்சல் உறை நகல் |
| ம.சா.ஆ.10 | – | 1ம் பிரதிவாதி இல்லை என்று திருப்பப்பட்ட அஞ்சல் உறை நகல் |
| ம.சா.ஆ.11 | – | 2ம் பிரதிவாதி இல்லை என்று திருப்பப்பட்ட அஞ்சல் உறை நகல் |
| ம.சா.ஆ.12 | –– | 1ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்று வாதி தரப்பில் தாக்கல் செய்த |

| | | |
|---|---|---|
| | | மனு நகல் |
| ம.சா.ஆ.13 | – | 1ம் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட பிரமாண வாக்குமூலம் நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி</u>** – இல்லை–

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 1998 முதல் 2002 வரை | 2ம் வாதியின் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் |
| எம.சா.ஆ.2 | 02.05.2005 | முதல் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு |
| எ.ம.சா.ஆ.3 | 26.03.1997 | 2ம் பிரதிவாதிக்கு முதல் பிரதிவாதி எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு நகல் |
| எ.ம.சா.ஆ.4 | – | சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.226/2022ல் பிராதின் உண்மை நகல் |
| எ,ம.சா.ஆ.5 | 26.03.1997 | இராசம்மாள் பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் உண்மை நகல் |
| எ,ம.சா.ஆ.6 | – | 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டைகள் நகல் |
| எ.ம.சா.ஆ.7 | | 1ம் வாதியின் வங்கி கணக்கு புத்தகம் நகல் |
| எ.ம.சா.ஆ.8 | – | வாதிகளின் குடும்ப அட்டை நகல் |
| எ.ம.சா.ஆ.9 | 15.02.2010 | மின் கட்டண ரசீது |

(ஒம்/–..எஸ். மும்தாஜ்)

சார்பு நீதிபதி,
சீர்காழி.

நேரிய / வரைவு உத்தரவு
இ.ம.எண்.5/2025–ல்
அசல்வழக்கு எண்.246/2022
நாள் –08.04.2026.